1970 மார்ச் 24]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, அதுபற்றியும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

திரு. ஆர். நாகசுந்தரம் : தலைவர் அவர்களே, லாரி, பஸ் போன்ற பாரம் உள்ள வண்டிகள் பழைய பாலத்தின்மீது போகக் கூடாது என்றும் புதிய பாலத்தின மேல் செல்வதற்கு உத்தரவிட்டு தற்போதுள்ள நெருக்கடியை குறைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, அப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கே நன்றாகத் தெரியும்.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, இந்தப் பாலங்களுக்கு எவ்வளவு வயது என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது? கட்டி முடிந்தவுடனேயே பயனற்றதாகப் போய்விடுவதாகச் சொல்கிறீர்களே, அதே அடிப்படையில்தான் காவேரிப் பாலத்தைப் பற்றியும் சொல்கிறீர்களா ? அதைப்பற்றிப் பரிசீலிக்க அரசாங்கம் முன்வருமா ? அதன்மீது அரசாங்கம் என்ன முடிவுக்கு வந்திருக்கிறது ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கேட்பது இந்தக் கேள்வியிலே வராதே.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, மூலக்கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை.

Rates for tourist taxis.

* 524 *Q.*—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) whether the rates for the tourist taxis have been revised by the Government; and

(*b*) if so, the reasons therefor?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : (அ) ஆம்.

(இ) சீருலா வாடகை மோட்டார் வண்டிகளை இயக்குவதற்கும் பேணுவதற்கும் ஏற்படும் அதிகச் செலவு காரணமாக, அவற்றின் கட்டண வீதங்கள் அதிகரிக்கப்பட வேண்டுமென்று சீருலா வாடகை மோட்டார் வண்டி உரிமையாளர்கள் முறையிட்டு கொண்டனர். சீருலாப் பயணிகளின் நலனை முன்னிட்டு நாடு முழுவதும் இந்த வீதங்கள் ஒரே மாதிரியாக இருப்பதை உறுதிப்படுத்தும் நோக்கத்துடன், சீருலா வாடகை மோட்டார் வண்டிகளின் கட்டண வீதங்களை மாற்றி அமைக்க வேண்டும் என்று இந்திய அரசும் கருத்து தெரிவித்தது. எனவே, இந்த அரசு போக்குவரத்து ஆணையாளருடன் கலந்தாலோசித்து, கட்டண வீதங்களை மாற்றி அமைப்பதற்கான ஆணையை மாநிலப் போக்குவரத்து அதிகாரிக்குப் பிறப்பித்துள்ளது.

ஹாஜி ம. மு. பீர்முகம்மது : பேரவைத் தலைவர் அவர்களே, வெளி மாநிலங்களிலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும் நம்முடைய நாட்டிற்கு சுற்றுலா பயணிகள் மிக அதிகமான அளவுக்கு வருகிறார்கள். ஆகவே, இந்தச் சமயத்தில் கட்டண உயர்வு செய்வது நல்லதல்ல. ஆகவே, அந்தக் கட்டண உயர்வை நிறுத்தி, சுற்றுலா டாக்ஸிகளில் நான்குபேர் பிரயாணம் செய்யலாம் என்பதை மாற்றி, ஐவர் பிரயாணம் செய்ய அனுமதிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, வெளிநாட்டுப் பயணிகள் அதிகமாக வருகிறார்கள் என்ற காரணத்தைக்கொண்டும், மோட்டார் வண்டிகளை இயக்குவதற்கும் பேணுவதற்கும் ஆகும் செலவுகளின் அடிப்படையைக் கொண்டும், மத்திய சர்க்கார் சிருலா வாடகை மோட்டார் வண்டிகளின் கட்டண விதங்கள் நாடு முழுவதும் ஒரே சீராக இருக்க வேண்டுமென்று செய்த சிபாரிசின் பேரிலே கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது.

Mail bags carried by State Transport Buses.

* 525 Q. THIRU N. KASIRAMAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) whether postal mail bags of Posts and Telegraphs Department are being carried in the buses operated by the State Transport undertaking ; and

(*b*) if so, the rate of subsidy that the Posts and Telegraphs Department is paying to the State Government for the carriage of mails, etc., in the buses of the Tamil Nadu Transport Department?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) அஞ்சல் பைகளை இம்மாநிலத்திலுள்ள பேருந்துகளில் எடுத்துச் செல்வதற்கான கட்டண விதங்களை நிர்ணயிப்பது பற்றிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. நா. காசிராமன் : தலைவர் அவர்களே அஞ்சல் பைகளை பஸ்ஸில் எடுத்துச் செல்வதற்கு ஒரு கிலோகிராமுக்கு ஒரு மைலுக்கு 4½ தம்பிடி என்று ஒரு கார்டு காலணாவுக்கு விற்ற காலத்திலே நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இப்பொழுதுள்ள கால தேசவர்த்தமானத்தை உத்தேசித்து, மற்ற ஜில்லாக்களிலே போனால் ஒரு மைலுக்கு 5½ ரூபாய் என்றும், ஒரு போஸ்ட் ஆபீஸைத் தொட்டால் 2½ ரூபாய் என்றும் கட்டணம் வைத்தால், தேச உடைமையாக்கப்பட்டிருக்கும் போக்குவரத்துக்கு வருமானம் அதிகம் கிடைக்குமே இதன் பேரில் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, தேச உடைமையாக்கப்பட்ட பஸ் வருமானத்திற்கு ஆலோசனை கூறிய கனம் உறுப்பினருக்கு என் நன்றியைத்